வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

**பரிசளிப்பு விழாவும்**

**நிறுவுனர் நினைவு நாளும் -2010**

ஆனி 29 செவ்வாய்க்கிழமை மு.ப.9.30

# அதிபர் அறிக்கை

**பிரதம விருந்தினர்கள்:**

**திருமதி யோ.பற்குணராஜா**

*(மாநகர முதல்வர்,மாநகரசபை யாழ்ப்பாணம்)*

&

**திரு.கு.பற்குணராஜா**

Vembadi Girls' High School

PRIZE DAY & FOUNDER'S DAY - 2010

June 29th Tuesday 9.30 a.m

# Principal's Report

## Chief Guests:

**Mrs. Y. Patkunarajah**

*(Mayoress Municipal Council, Jaffna)*

&

**Mr. G. Patkunarajah**

# நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| மங்கல விளக்கேற்றல் | | |
| கடவுள் வாழ்த்து | | |
| வரவேற்புப்பாடல் | - | மாணவிகள் |
| ஆசியுரை | | வணக்கத்துக்குரிய<br>திரு. தேவதாசன் அடிகளார் |
| பரிசுத்தின அறிக்கை | - | அதிபர் |
| பரிசுத்தின உரை | - | பிரதம விருந்தினர் |
| நிறுவுனர் நினைவுரை | - | திருமதி. ரதிராணி யோகேந்திரராஜா |
| பேச்சு (தமிழ்) | - | கனகதுர்க்கா கனகரட்ணம் |
| பேச்சு (ஆங்கிலம்) | - | கதுர்ஷா இக்னேஷியஸ் |
| பரிசு வழங்கல் | - | பிரதம விருந்தினர் |
| நன்றியுரை | | |
| முன்மொழிபவர் | - | செயலாளர்<br>பாடசாலை அபிவிருத்திச்சங்கம் |
| வழிமொழிபவர் | - | சிரேஷ்ட மாணவத் தலைவி |
| கல்லூரிக்கீதம் | | |

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# பரிசளிப்பு விழா - 2010

## வரவேற்புப் பாடல்

J/Vembadi Girls' High Scho
LIBRARY
Acc No: M 136
Class No.
Date:

**இராகம் - கம்ஸத்வனி**
**தாளம் - ஆதி**

### பல்லவி

வருக வருக பெரியோரே — நாம்
இருகரம் கூப்பி (தொழுது) வரவேற்கின்றோம்

### அனுபல்லவி

பன்னரும் ஞானமும் உன்னத இன்பமும்
கலந்து சிறந்து அவனியில் விளங்கிட (வருக)

### சரணம் I

ஈடு இணையிலா பெண்கள் கல்லூரி
அவனி எங்கும் கல்வி மணம் வீசும்
நீடு புகழ் உடைய வேம்படி மண்டபத்தே
உளம் கொண்டு நிறைவுடன் வருகை தந்தீரே (வருக)

### சரணம II

**இராகம் - வலஜி**

கல்வி கேள்விதனை தெளிவுற அறிந்து
பட்டங்கள் பெற்று பதவிகளில் மிளிரும்
வேம்படி புதல்வியே! வளம் நிறை குருவே!
மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரியே (வருக)

### சரணம் III

**இராகம் - கானடா**

மண்ணகத்தில் மாட்சி பெற்ற முதல்வர் துணைவராம்
பதவி பட்டம் என பல்துறையில் உயரும் (ஒளிரும்)
எண்ணகத்தில் களங்கமில்லா, செயலர் பற்குணமே
பல்லாண்டு துணையுடன் இனிது வாழ்கவே (வருக)

### சரணம் IV

இராகம் - மத்தியமாவதி

கல்விப் பணிமனை பெரியோரே — மற்றும்
நிறை பணி புரிந்திடும் அதிபர் ஆசான்களே!
பள்ளி வளர்ச்சியில் மகிழ்ந்திடும் - பழைய
மாணவர், பெற்றோர், மற்றோர் அனைவரும் (வருக)

## பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் - 2009

| | தமிழ்மொழி மூலம் | ஆங்கிலமொழி மூலம் |
|---|---|---|
| கா.பொ.த சாதாரணம் தோற்றியோர் | 160 | 22 |
| உயர்தரம் தகுதி பெற்றோர் | 160 | 22 |
| மொத்தம் | 182 பேர் | |

100% சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விசேட சித்தி

| | தமிழ்மொழிமூலம் | ஆங்கிலமொழிமூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 9 A | 12 | 2 | 14 |
| 8 A | 17 | 4 | 21 |
| 7 A | 21 | 4 | 25 |
| 6A | 25 | 4 | 29 |
| 5A | 17 | 2 | 19 |
| 5A இற்குக் குறைவாக | 68 | 6 | 74 |
| மொத்தம் | 160 | 22 | 182 |

## க.பொ.த உயர்தரம் - 2009

| பாடப்பிரிவு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம். |
|---|---|---|---|
| உயிரியல் | 196 | 143 | 72.95% |
| கணிதம் | 74 | 41 | 55.40% |
| வா்த்தகம் | 50 | 46 | 92% |
| கலை | 72 | 70 | 97.22% |

## க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 3A பெற்ற மாணவர்கள்

| மாணவர்கள் | மாவட்டமட்டத்தில் |
|---|---|
| 1. வர்த்தகம் | |
| சியாமா பதுமநிதி | 01 |
| ஐஸ்வர்யா சந்திரன் | 02 |
| நிருஜா ராஜகுலநாயகம் | 20 |
| 2. <u>கலை</u> | |
| லக்சியா சிறிபஞ்சாட்சரம் | 40 |
| சிறோன் சிறோமி அன்ரன் | 03 |
| சிவாஞ்சலி மகாலிங்கம் | 28 |
| 3. கணிதம் | |
| தனுஜா உருத்திரகோடீஸ்வரன் | 14 |

## க.பொ.த உயர்தர பரீட்சைப்பெறுபேறு

| | விஞ்ஞானம் | கணிதம் | வர்த்தகம் | கலை |
|---|---|---|---|---|
| 3A | - | 1 | 3 | 3 |
| 2A,B | 3 | 3 | 3 | 8 |
| A,2B | 7 | 3 | 5 | 9 |
| 2A,B,C | - | - | - | 1 |
| 3B | 3 | - | - | 4 |
| A,B,C | 2 | - | - | 10 |

## 2009 இல் முகாமைத்துவக் குழு

அதிபர் திருமதி.க. பொன்னம்பலம்
பிரதி அதிபர் திருமதி. ரா. முத்துக்குமாரன்
உப அதிபர் திருமதி. சி. ஜெயபாலன்
திருமதி. அ. தவறஞ்சிற்

பகுதித்தலைவர்கள்

செல்வி. ம.டொ.செ. செபஸ்தியாம்பிள்ளை
செல்வி. த. புண்ணியமூர்த்தி
திருமதி. வி. புஸ்பநாதன்
திருமதி. பா. உதயகுமார்
திருமதி க. கருணாநிதி

எமது பாடசாலையின் சகல நிர்வாகக் கடமைகள், கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பாடசாலையின் விசேட நிகழ்வுகள் யாவற்றிற்கும் முகாமைத்துவக் குழு சிறந்த ஒத்துழைப்பு நல்கியது. தொடர்ந்தும் இந்நிறுவனத்தின் எதிர்காலம் பிரகாசிக்க மிகச்சிறந்த ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் நல்குவார்களென என நம்புகிறேன்.

## பல்கலை அனுமதி –

| | 2008 | 2009 |
|---|---|---|
| மருத்துவம் | 9 | 10 |
| பல் வைத்தியம் | 1 | - |
| மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் | - | 1 |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | - | 4 |
| மிருக வைத்தியம் | 2 | - |
| உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 1 | - |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 1 | - |
| மருந்தகவியல் | 1 | - |
| விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 3 | 1 |
| ஊடுகதிர்ப்படமெடுப்பு | - | 2 |
| தாதியியல் | 8 | 9 |

| | | |
|---|---|---|
| சுகாதார விருத்தி | 6 | 7 |
| விவசாயம் | - | 21 |
| உயிரியல் விஞ்ஞானம் | 14 | 1 |
| பிரயோகவிஞ்ஞானம் (உயிரியல்) | 3 | 1 |
| சித்த மருத்துவம் | 8 | 16 |
| பொறியியல் | 2 | 7 |
| அளவையியல் விஞ்ஞானம் | 1 | 1 |
| தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் | 3 | 1 |
| கணனி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் | - | 7 |
| கணனி விஞ்ஞானம் | 2 | - |
| பௌதிக விஞ்ஞானம் | 4 | 3 |
| முகாமைத்துவம் | 9 | 9 |
| வர்த்தகம் | 1 | 1 |
| சட்டம் | 6 | 1 |
| கலை | 16 | 19 |
| மொத்தம் | 101 | 122 |

## தேசிய மட்டத்தில் எமது மாணவர்களின் சாதனைகள்

1) எயிட்ஸ்தின கட்டுரைப் போட்டி – (அகில இலங்கை ரீதியில் )
ஆன் மரீனா தியோடர் - கட்டுரை – 1ம் இடம்

2) தேசிய மட்டத்தில் நடைபெற்ற
(1) சதுரங்கச் சுற்றுப் போட்டி – 15 வயது கீழ்ப்பிரிவு
(2) கரம் சுற்றுப் போட்டி - 19 வயது கீழ்ப்பிரிவு
ஆகியவற்றில் முறையே 15, 19 வயதுக்குட்பட்ட அணி வீராங்கனைகள் பங்குபற்றினர்.

15 வயது - மாவட்டம் - 2ம் இடம்
மாகாணம் - 2ம் இடம்

1. பவந்தினி கதிரேசப்பிள்ளை – அணித்தலைவி
2. பிரணவி ஸ்ரீதரன்
3. சஜிலா மகேந்திரன்
4. சுமித்திரா சிவசுப்பிரமணியம்
5. றொஷானி ராஜகுமார்
6. அனோஷா இக்னிசியஸ்
7. விதுர்ஷா சிவகுமாரன்

19 வயது – மாவட்டம் - 1ம் இடம்
மாகாணம் - 2ம் இடம்

1. சுகன்யா தீபைந் - அணித்தலைவி
2. கர்ஸிகா பாலச்சந்திரன்
3. மதிவதனி முருகையா
4. துஷானி ராசநாதன்
5. கிரிஜா செல்வராஜா
6. கஜலக்ஷனா சத்தியசீலன்

3) தேசிய மட்டத்தில நடைபெற்ற கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் - கீழ்ப்பிரிவில்

பிரியந்தினி மகேஸ்வரன் - பங்குபற்றினார்.

4) தேசிய மட்டத்தில் நடைபெற்ற English Dictation Competition இல் ( 2007 இற்குரிய போட்டியின் முடிவு 2009 இல் வெளியாகியது.) செல்வி. வரணிதா ராமகிருஷ்ணராஜா (தரம் 7) 1வது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

5) தமிழ்த்தின விழா – 2009 – தனிநடனம் பிரிவு – IV

ஸ்ரீதரா வரதராஜன் - தேசிய மட்டம் 2ம் இடம்

**Result of Provincial Level English Day Competitions - 2009**

| Name | Event | Grade | Rank |
|---|---|---|---|
| Mathura. K | Copy writing | 10 | 2nd |
| Nijani . K | Copy writing | 11 | 1st |
| Amizhthini. N | Creativewriting | 10 | 1st |
| Mathanki . N | Creativewriting | 11 | 1st |
| Gobika . R | Creativewriting | 11 | 2nd |
| Nishanthika. N | Creativewriting | 11 | 1st |

1. சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ் இந்துக்கல்லூரி நடாத்திய பொது அறிவுப்போட்டி

கோபிகா இராமகிருஷ்ணன் தரம் -7 - 1ம இடம்

கோபிகா இரவீந்திரன் தரம் - 11 - 2ம் இடம்

2.சிறுவர்தின , முதியோர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலகம் நடாத்திய போட்டிகளில் பரிசில் பெற்றோர்

பேச்சு (சிறுவர்தினம்)

சிவசொருபி கணபதிப்பிள்ளை - தரம் 6 - 2ம் இடம

சௌயாகாயாரோகணன - தரம் 9 - 1ம் இடம்

கனகதுர்க்கா கனகரத்தினம் - தரம் 13 - 1ம் இடம்

முதியோர்தினப் பேச்சு ஆன்மரீனா தியடோர்- தரம் 13 - 1ம் இடம்

கவிதை

தேனுகா மகேந்திரன் - தரம் 10 - 1ம் இடம்

4. வலிகிழக்கு பிரதேச மட்ட தேசிய கலை இலக்கியப் போட்டி

தாரணி கோகழிநாதன் - தரம் 10 - கட்டுரை 1ம் இடம்

- கவிதை 3ம் இடம்

5. மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலகம் நடாத்திய பட்டிமன்றம்

மு. சிவசக்தி

சி. மதுஷா AL 13 Arts

தி. உமாப்பிரியா 1ம் இடம்

6. சிவில் நிர்வாக அலுவலகம் நடாத்திய விவாதப்போட்டி

சிவசக்தி முத்துக்குமாரசாமி

அம்பிகை பஞ்சலிங்கம் 1ம் இடம்

சியாழி பாஸ்கரன்

## எமது மாணவர்களின் சாதனைகள்

1. க.பொ.த (சா.த) 2009 பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மகாத்மாகாந்தி

புலமைப்பரிசில் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்

1. ஸ்ரீதேவி வேலுமகிழன்
2. டினோஜா சற்குணராசா

2. 'சினஹுவ' (புன்னகை) புலமைப்பரிசில் வழங்கல் 2009 இல் க.பொ.த (சா.த) பெறுபேற்றின்

அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் (DIMO company யின் அநுசரனையுடன்)

1. விதுர்ஷனா மோகனராஜ்
2. சுவஸ்திகா சண்முகலிங்கம்
3. அனுஷிதா ரவீந்திரன்
4. தர்ஷிகா தர்மபாலன்

3. சிசு உதான தசவதா பிரணாம' புலமைப்பரிசில் - 2009

1. வாகினி நித்தியானந்தன்

4. தமிழ்த்தினப்போட்டி - 2009

குழு நடனம் - கோட்டம் - 2ம் இடம்

- வலயம் - 3ம் இடம்

நாட்டிய நாடகம் - கோட்டம் - 1ம் இடம்
- வலயம் - 2ம் இடம்

தனி நடனம் - பிரிவு – IV
பிரவீனா செல்வரட்ணம் - கோட்டம் - 1ம் இடம்
- வலயம் - 1ம் இடம்
- மாவட்டம் - 2ம் இடம்

இசை நாடகம் -
- வலயம் - 1ம் இடம்
- மாவட்டம் - 2ம் இடம்

இசை குழு – I - கோட்டம் - 1ம் இடம்
- வலயம் - 3ம் இடம்

5. கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட அழகெழல் போட்டியில்
இசை தனி – காயத்திரி சிறீகந்தவேள்
- கோட்டம் - 1ம் இடம்
- வலயம் - 1ம் இடம்

தனி நடனம் - ஜனனி சிவலிங்கம்
- கோட்டம் - 2ம் இடம்
- வலயம் - 1ம் இடம்

குழுநடனம் - கோட்டம் - 1ம் இடம்
- வலயம் - 2ம் இடம்

சித்திரம் - நிஜானி குமரேசமூர்த்தி
- கோட்டம் - 2ம் இடம்
- வலயம் - 3ம் இடம்

6. தினக்குரலில் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் - மத்திய பிரிவில்
1. பவித்திரா முருகானந்தசர்மா - 1ம் இடம்
2. பவித்திரா புவனேந்திரராஜா - 6ம் இடம்

7 சமூக நல்லிணக்கத்திற்காக நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் கோட்ட ரீதியில்
1. நிஜானி குமரேசமூர்த்தி - 3ம் இடம்
2. பவித்திரா புவனேந்திரராஜா - 4ம் இடம்
3. கேசிகா அருட்செல்வன் - 4ம் இடம்

8. H.N.B யினால் நடாத்தப்பட்ட இசைப்போட்டியில்

இசை தனி – தேவசேனா விஜயகுமார் மாவட்ட மட்டம் 1ம் இடம் பெற்றுக் கொண்டார்.

09. ஸகிஷ்ணா ரவிச்சந்திரன் சைவபரிபாலனசபை, இணுவில் பரராஜசேகரப்பிளளையார் கோயில் என்பவற்றால் நடாத்தப்பட்ட இசைப் (சங்கீதம்) போட்டியில் 1ம் இடங்களைப் பெற்று தங்கப்பதக்கங்களை பெற்றுக் கொண்டார்.

10யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்வு – 2009

1. பெனிற்றா அன்ரன் யேசுதாஸ் தரம் - 7 - 2ம் இடம்
2. நிக்கலின் ஸ்ரனிஷா அன்ரன் தரம் - 8 - 1ம் இடம்
3. ஆன் அபிநயா அருள்நேசன் தரம் - 10 - 1ம் இடம்

11. தென்னிந்திய திருச்சபையினால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட திருவிவிலிய வினாடிவனாப் போட்டியில் மௌலிகா பத்மநாதன் 1ம் இடத்தினைப் பெற்று வெற்றிக் கிணணத்தைப் பெற்றுக் கொண்டார்.

## அபிவிருத்தித்திட்டங்கள் - 2009

1. 40 கணனிகளுடன் கூடிய நவீன கணனிக்கூடம் பெற்றோர், பழைய மாணவர் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டமை.
2. நூலகத்திற்கென NECORD உதவியுடன் இரண்டு மாடிக் கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டமை.
3. கல்வி அபிவிருத்தி, மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் முன்னேற்றம் என்பவற்றிற்காக தரவட்டங்கள் உருவாக்கப்பட்டமை.

மாணவரது பல்சார் ஆற்றல்கள், திறன்களை வளர்த்தெடுப்பதன் ஊடாக ஆளுமை மிக்க மாணவர் சமுதாயமொன்றை உருவாக்கும் அடிப்படையில் அமைந்த செயற்பாடுகள் தரவட்டங்களின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த இலக்குகளை அடைவதற்காக 10 தரவட்டங்கள் அமைக்கப்பட்டன.

1. பாடசாலை அபிவிருத்தி,மற்றும் முகாமைத்துவ விருத்தி
2. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள,
3. பாடசாலையும் சமூகமும் தொடர்புபட்டதான செயற்பாடுகள்,
4. அலுவலக முகாமைத்துவத்தில் 5S நடைமுறைகளை மேலும் வினைத்திறனாக்குதல்,
5. ஆசிரியர்,மாணவர் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் தொடர்பான தகவல்களை இணையத்தில் பேணுதல்,
6. ஆய்வுகூடங்களில் 5S நடைமுறைகளை அமுல்படுத்தல்
7. ஆங்கிலமொழி மூலமான கல்வி அபிவிருத்தி,

8. கணித, விஞ்ஞான பாடங்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்கல்,
9. பாடசாலையின் சூழல், சுத்தம் , அழகு என்பவற்றை பேணிப் பாதுகாத்தல்,
10. மாணவருக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குவதன் ஊடாக மாணவரது உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

ஒவ்வொரு தரவட்டங்களும், அவற்றிற்குரிய பொறுப்பாசிரியின் தலைமையின் கீழ் 10 – 12 ஆசிரியர்களை உள்ளடக்கி தொழிற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு தரவட்டத்திற்குரிய மகுடவாசகங்களும் வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

"5S" நடைமுறைகளை தொடர்ந்தும் அமுல்படுத்தும் நோக்கில் '5S Monitoring team' உருவாக்கப்பட்டு உள்ளது. வகுப்பறையில் '5S' நடைமுறைகளை மேற்பார்வை செய்வதுடன் முறையான புள்ளித்திட்டம் ஒன்றின் அடிப்படையில் சிறந்த வகுப்பறை தெரிவு செய்யப்பட்டு, பரிசில் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் 2009 Arts B சிறந்த வகுப்பாகத் தெரிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மாணவரிடையே 5'S' தொடர்பான நடைமுறைகள் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லப்படுகின்றன.

மத்திய சுற்றாடல் சபையினால் பாடசாலைகளுக்கிடையில் 'சுற்றுப்புறச் சூழலின் தூய்மை பேணும்' போட்டியில், எமது பாடசாலை யாழ் மாவட்டத்தில் சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டது. மேலும் சுகாதாரத் திணைக்களத்தால் மேற்படி விடயம் தொடர்பாக ஆய்வு நடாத்தப்பட்ட பாடசாலைகளில் எமது பாடசாலை சிறந்த பாடசாலை எனும் பெருமையைப் பெற்றுக்கொண்டது. யாழ் மாநகர சபையின் டெங்கு ஒழிப்பு பிரிவினால், சுற்றுப்புறச் சூழலின் தூய்மை பேணும் தன்மை தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளில் எமது பாடசாலையின் சுற்றுப்புறச் சூழல் மிகத்திருப்திகரமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருட இடர்கால செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தவர்களிற்காக உடுபுடவைகள் , மற்றும் கற்றல் சாதனங்கள், அச்சடித்த, எழுதப்பட்ட குறிப்புக்கள் முறையே எமது ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களிற்கு வழங்கப்பட்டது.

தற்போது எமது பாடசாலை நூலகம் மிகவும் வசதிபடைத்ததாக முன்னேற்றம் கண்டுள்ளது. மாணவரது பல்துறை ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் பல்வேறுபட்ட நூல்கள், சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை சிற்றுண்டிச்சாலையும் பூரணமாக்கப்பட்டு, எமது ஆசிரியர்கள் மாணவர்களின் சிற்றுண்டித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது.

இணைப்பாடவிதான செயற்பாடுகளிற்காக எமது பாடசாலையில் இயங்கும் கழகங்கள், மன்றங்கள், படைப்பிரிவுகள், சேவைப்பிரிவுகளும் இவற்றின் செயற்பாடுகளும்

1. மாணவர் முதல்வர் சபை
2. உயர்தர மாணவர் ஒன்றியம்
3. தமிழ் மன்றம்
4. ஆங்கில மன்றம்
5. இந்து மன்றம்
6. கிறிஸ்தவ மன்றம்
7. விஞ்ஞான மன்றம்
8. வர்த்தக மன்றம்
9. கலை மன்றம்
10. கவின்கலைமன்றம்
1.நடனம்
2.இசை
3. சித்திரம்
11. நூலக மன்றம்
12. சுகாதார மன்றம்
13. புகைப்பட கலைமன்றம்
14. தகவல் தொழில்நுட்ப மன்றம்
15. 6 -11 விஞ்ஞான மன்றம்
16. 6 -11 வர்த்தக மன்றம்
17. 6 -11 சமூகக்கல்வி மன்றம்
18. 6 -11 மனையும் மங்கையும்
19. **Scrabble Club**
20. தேசிய இளைஞர் மன்றம்
21. பொது அறிவு மன்றம்
22. விவாத மன்றம்
23. 6 -11 தமிழ் இலக்கிய மன்றம்
24. 6 -11 ஆங்கில இலக்கிய மன்றம்
25. பெண் சாரணியம்
26. இன்ரறக்ற் கழகம்
1. சதுரங்கக் கழகம்
2. லியோ கழகம்
3. இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்
4. கூட்டுறவுச் சங்கம்
5. சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு
6. மாணவர் நலன்புரிச்சங்க படைப்பிரிவு
7. ஒழுக்காற்று சபை
8. சுற்றாடல் முன்னோடி சபை

## 9. இளம் புத்தாக்குனர் கழகம்

பாடசாலையின் ஒழுக்கநிர்வாகத்திற்கு உறுதுணையானவர்களாக மாணவமுதல்வர் சபையினர் செயற்பட்டுவருகிறார்கள் வருங்காலத்தில் சிறந்த தலைவர்களாக தம்மை உருவாக்கிக் கொள்வதற்கான ஆளுமையை இச் சபை மூலம் மாணவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளின் போதும் மாணவர்களது அமைதி, ஒழுங்கு என்பவற்றை பேணிவருகிறார்கள்.

உயர்தரத்தில் கல்வி பயில்கின்ற சகல மாணவர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டது உயர்தர மாணவர் மன்றம். பிரதி புதன்கிழமை தோறும் உயர்தர மாணவர்கள் ஒன்று கூடி தமது தனித் திறமைகளை வெளிக்காட்டி வருவதுடன் வருடந்தோறும் உயர்தர மாணவர் ஒன்று கூடலையும் சிறப்பாக நடாத்தி வருகின்றது. எனினும் கடந்த வருடம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அவ் ஒன்றுகூடலை மிகவும் எளிமையாகவும் சிறப்பாகவும் நடாத்தியதுடன் ஒன்று கூடலிற்காக சேகரித்த நிதியை அகதி முகாம்களில் உள்ள மக்களிற்கு நன்கொடையாக வழங்கியது

தமிழ் மன்றமானது எழுத்தாக்கம், கலை ஆகிய திறன்களை மாணவர்கள் மத்தியில் வளர்க்கும் முகமாக பிரிவு ரீதியாக போட்டிகளை நடாத்தி வருவதுடன் அப்போட்டிகளில் எமது மாணவர்கள் தேசியமட்டம் வரை சென்று பரிசில்கள் பெறுவதற்கு ஊக்கமளித்தும் வருகின்றது. தமிழ் மன்றத்துடன் விவாதமன்றமும் இணைந்து மாணவர்களது விவாதத்திறமைகளை மெருகூட்டி வருவதுடன் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெறும் விவாதப்போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி பரிசில்பெற உறுதுணையாக உள்ளது.

ஆங்கிலமன்றமானது மாணவர்களின் ஆங்கில ஆளுமையை விருத்தி செய்வதற்காக பல்வேறு போட்டிகளை பாடசாலைமட்டத்தில் நடாத்தி வருவதுடன் தேசியமட்டம் வரை சென்று எமது மாணவர்கள் வெற்றி பெறுவதற்கு வழிகோலுகின்றது

மாணவர்களினது ஆன்மீக சிந்தனைகளை வளர்க்கும் முகமாக கருத்தரங்குகள், சமயசொற்பொழிவுகள் ஆகியவற்றை இந்துமன்றம் ஒழுங்கு செய்துவருகின்றது. ஓவ்வொரு வருடமும் விவேகானந்தர்விழா, சிவராத்திரிவிழா, குருபூசைகள், வாணிவிழா பேன்றவற்றை மிகவும் நேர்த்தியாக நடாத்திவருகின்றது. பாடசாலையில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிற்கும் பூரணகும்பம் வைக்கும் பணியையும் செய்து வருகின்றது. பிரதி வெள்ளிக்கிழமைளில் மாணவி ஒருவரை தயார் செய்து நற்சிந்தனை வழங்கும் செயற்பாட்டையும் இம் மன்றம் செய்து வருகின்றது.

கிறிஸ்தவ மன்றமானது நற்சிந்தனையை வளர்க்குமுகமாக தினமும் பிரார்த்தனையை நடாத்தி வருவதுடன் வருடம் தோறும் க.பொ.த உயர்தர மாணவர்களிற்கான "தவக்கால சமான ஒடுக்கம்" நிகழ்வினையும் நடாத்தி வருகின்றது. கிறிஸ்த்தவ மதம் சார் போட்டிகளில் எமது மாணவர்களை பங்குபற்றச் செய்வதுடன் பரிசில்களைப் பெறவும் ஊக்குவிக்கின்றது.

விஞ்ஞான மன்றமானது பிரதி வெள்ளிக்கிழமைகளில் விஞ்ஞானப்பிரிவு மாணவர்களை ஒன்றுகூட்டி மாணவர்களது விஞ்ஞானம் சம்பந்தமான பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. வருடம் தோறும் நடைபெறும் விஞ்ஞான விழாவில் விஞ்ஞான சஞ்சிகையான "அரும்பு" இதழ் - 15 சஞ்சிகையை வெளியிட்டுவருகின்றது. கடந்தவருடம் பொதுவிஞ்ஞான ஆய்வுகூடம், உயிரியல் ஆய்வுகூட தேவைகளிற்காக குறித்தளவு நிதியை செலவிட்டது. அத்துடன் பாடசாலை கலைநிகழ்வுகளில் மாணவர்கள் பயன்படுத்துவதற்காக 15000 பெறுமதியான Microphones ஐ அன்பளிப்பு செய்துள்ளது. சிவத்தமிழ் மானிட விடியற்கழகத்தினரின் வேண்டுகோளிற்கிணங்க இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு தேவையான பாடப் புத்தகங்கள் (தரம் - 6 -13 வரையான), குறிப்புக் கொப்பிகள் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

வர்த்தகத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டது வர்த்தக மன்றமாகும். வெள்ளிதோறும் வர்த்தகமன்றக் கூட்டத்தை நடாத்துவதுடன் அங்கு மாணவர்களது நிகழ்வுகள் பலவும் இடம்பெறுகின்றது. வருடம் தோறும் வணிகதின விழாவை கொண்டாடிவருவதுடன் வணிக சம்மந்தமான ஆக்கங்களை சுமந்துவரும் "வர்த்தகி" சஞ்சிகையையும் வெளியிடுவதில் இம் மன்றம் சிறப்பாக செயலாற்றுகின்றது.

வெள்ளிக்கிழமை தோறும் உயர்தரத்தில் கலையைப்பயிலும் மாணவர்களை ஒன்றுகூட்டி தமிழ் மொழியிலும் ஏனைய கலைத்துறையிலும் அவர்களிற்கு உள்ள திறமைகளை வெளிக்கொன்டு வருவதற்கு கலைமன்றம் பெரிதும் உதவிவருகின்றது.

இசை, நடனம், சித்திரம் ஆகிய கலைகளில் மாணவர்களிற்குள்ள திறமைகளை மெருகூட்டவும் வெளிக்கொண்டு வருவதற்கும் கவின்கலைமன்றம் பெரும் பங்காற்றி வருகின்றது. இசை, நடனம் ஆகிய துறைகளில் எமது மாணவர்கள் தேசிய மட்டம் வரை பங்குபற்றி பதக்கங்களை பெற்று வருகிறார்கள்.

நூலக மன்றமானது ஆசிரியர், மாணவர்களின் பாடம் சம்மந்தமான மேலதிக தகவல்களையும் அறிவினையும் பெற்றுக்கொள்வதற்கு உதவுகிறது. பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் கல்வி சம்மந்தமான ஆக்கங்கள், வினாத்தாள்களையும் பாடசாலையில் நடைபெறும் தவணைப்பரீட்சை வினாத்தாள்களையும் சேகரித்து உரிய வகையில் பராமரித்து வருகின்றது. வருடாவருடம் வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களிடையே பல போட்டிகளை

நடாத்தி நூலகதின விழாவில் பரிசில்களை வழங்கி மாணவர்களினை ஊக்குவிக்கின்றது.

பாடசாலை மாணவிகளின் சுகாதாரத்தை பராமரிப்பதிலும் ஒழுங்காக்குவதிலும் சுகாதார மன்றம் பெரும் பங்காற்றி வருகின்றது. வைத்திய நிபுணர்களை வரவழைத்து மாணவர்களிற்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலவச சிகிச்சை முகாமையும் ஒழுங்கு செய்து வருகின்றது. கடந்த காலத்தில் தீவிரமாக பரவிவரும் டெங்கு நுளம்பை ஒழிப்பதற்காக பாடசாலை வளாகத்தில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டது.

புகைப்படக்கலை மன்றமானது எமது மாணவர்களிடையே புகைப்படக்கலையினை விருத்தி செய்வதிலும் ஆர்வத்தை ஏற்படுத்துவதிலும் பெரும் பங்காற்றி வருகின்றது. பாடசாலை நிகழ்வுகளை ஒளிப்படமாகவும் புகைப்படமாகவும் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்வதுடன் அவற்றை உடனுக்குடன் வலையமைப்பில் தரவேற்றம் செய்வதற்கும் உதவி புரிகின்றது.

தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் நோக்கில் தகவல் தொழில்நுட்பகழகம் செயற்பட்டு வருகின்றது. இலங்கை கல்வி நிறுவகத்தால் நடாத்தப்பட்டுவரும் மென்பொருளாக்க போட்டியில் வருடா வருடம் எமது ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு பற்றி சான்றிதழ்களும் பரிசில்களும் பெற்று வருகின்றார்கள்.

தரம் 6 – 11 வரை விஞ்ஞானமன்றம் , வர்த்தகமன்றம் , சமூகக்கல்விமன்றம், மனையும் மங்கையும் , தமிழ்மன்றம், ஆங்கில மன்றம் என்பன உருவாக்கப்பட்டு கீழ், இடைநிலைப்பிரிவு மாணவர்களின் குறித்த பாடங்களில் விருத்தியை ஏற்படுத்தவும் அப்பாடங்கள் தொடர்பாக மாணவர்களிடம் உள்ள திறன்களை வெளிக் கொண்டு வரவும் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

மாணவர்களிற்கு ஆங்கில சொற்களில் தேர்ச்சியை பெற்றுக்கொடுப்பதில் Scrabble club பேருதவி புரிகின்றது. 2004ல் இது உருவாக்கப்பட்டது. எமது மாணவிகள் இதுவரை பல Scrabble போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்கள், வெற்றிக்கேடயங்களை பெற்றுள்ளனர்.

மாணவர்களின் பொது அறிவினை விருத்தி செய்வதற்காக பொது அறிவு மன்றம் உருவாக்கப்பட்டது. பிரதி திங்கள் தோறும் காலை பிரார்த்தனையில் 5 பொது அறிவு வினாக்கள் கேட்கப்படும். சரியான விடை கூறும் மாணவர்களிற்கு பரிசில் வழங்கப்பட்டு வருகிறது. இச்சேவையை இம்மன்றம் செவ்வனே நடாத்துகின்றது.

சமுதாயத்திற்கு தேவையான தனிமனிதப் பண்புகளை பாடசாலைக் காலத்திலேயே உருவாக்குவதற்கும் தன்னம்பிக்கை, கூட்டாக செயற்படும் பண்பு, பிரச்சனைகளை விடுவித்தல், தேசப்பற்று போன்றவற்றை ஏற்படுத்தும் ஒரு கல்வி சார்ந்த இயக்க அமைப்பாக சாரணியம் செயற்பட்டு வருகிறது. பாடசாலை நிகழ்வுகள் யாவற்றிலும் தம்மாலான சேவைகளை சிறப்பாக செய்து வருகிறார்கள்.

இன்ரறக்ட் கழகம் பாடசாலையில் மட்டுமல்லாது சமூகத்திலும் பல செயற்பாடுகளை செய்து வருகிறது. பாடாசாலை Sick room,Home Science room, தம்பையா மண்டம் ஆகியவற்றை பராமரித்தல், பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளில் உணவு பரிமாறல் ,வீதி போக்குவரத்துச் சேவையை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளை பாடசாலையில் மேற்கொண்டுள்ளது. இரத்த வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் இன்ரறக்ட் கழக மாணவர்களும் பங்குபற்றினர். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இக்கழகத்தால் நிதி சேகரித்து கொடுக்கப்பட்டது. கைதடி முகாமிலுள்ள மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்குவதற்காக நிதி சேகரித்து கொடுக்கப்பட்டது.

மாணவரின் சிந்தனையை ஒரு வழிப்படுத்துவதையும் ,புத்திக்கூர்மையை வெளிப்படுத்தும் நோக்கிலும் சதுரங்கக் கழகம் செயற்பட்டு வருகிறது. சதுரங்க கழகம் சார்பில் எமது மாணவிகள் அணிகளாகவும் தனிப்பட்ட ரீதியிலும் யாழ் மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்று வருகிறார். 1993ல் இருந்து இன்று வரை பாடசாலையில் பல செய்ற்பாடுகளை செய்து வருகின்றது.

சேவை அர்ப்பணிப்பு நோக்கில் ஊக்கம் கொண்ட மாணவர்களை தன்னகத்தே கொண்டு பாடசாலையில் முதலுதவி, வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை பேணுவதற்கு நலன்பரிச் சங்கம், செஞ்சிலுவைச்சங்கம், பரியோவான் படைப்பிரிவு ஆகியவை பெரும் பங்காற்றி வருகின்றன. கூட்டுறவுச் சட்டதிட்டங்களிற்கு அமைவாக ஆசிரியர், மாணவர்களின் நலன் பேணும் சங்கமாக 30வருடங்களுக்கு மேலாக கூட்டுறவுச்சங்கம் சிறப்பான சேவையை ஆற்றி வருகிறது. ஆசிரியர் , மாணவர்களிற்கு நியாயமான விலையில் கற்றல் உபகரணங்களையும் , குறைந்த விலையில் போட்டோ பிரதியை பெறும் வசதியையும் செய்து வருகிறது.

தரம் 10,11ல் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களின் நாடகத்தில் செயன்முறை செயற்பாட்டை சிறப்பாக செயற்படுத்துவதற்கு இம்மன்றம் உதவுகின்றதுடன் நாடக போட்டிகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி பரிசில்கள் பெறவும் உறுதுணையாயுள்ளது.

மாணவர்களை ஒழுக்கமுடையவர்களாகவும் நற்பண்புகள் நிறைந்தவர்களாகவும் உருவாக்குவதிலும் மாணவர்களிற்கு உரிய வழிகாட்டல் ஆலோசனை வழங்குவதிலும் ஒழுக்காற்றுச்சபை முன்னோடியாக விளங்குகின்றது. பாடசாலைச் சுற்றாடலின் அழகு,சுத்தம் போன்றவற்றை சுற்றாடல் முன்னோடிச்சபை கண்காணித்து வருகிறது.

எமது மாணவர்களின் புதிய தொழில்நுட்ப சிந்தனைகளிற்கு வித்திடுவதற்கும் , அவர்களிடமள்ள திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் புத்தாக்குனர் கழகம் பெரும் உதவி புரிகின்றது. வருடாவருடம் மாணவர்களின் புதிய கண்டு பிடிப்புக்களை கொண்டு கண்காட்சி ஒன்றை நடாத்துவதன் மூலம் மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்துகின்றது.

சதுரங்கம், பூப்பந்து , கரம், வலைப்பந்து மேசைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் எமது மாணவர்களை ஈடுபடச் செய்வதில் விளையாட்டுத்துறை பங்களிப்புச் செய்கிறது. பல்வேறு மட்டங்களில் நடைபெறும் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி வருகின்றார்கள். சதுரங்கம், கரம் ஆகிய விளையாட்டுக்களில் கடந்த வருடம் எமது மாணவர்கள் தேசிய மட்டம் வரை பங்குபற்றி உள்ளனர்.

## எமது பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நடாத்தப்படும் சேவைகள்

### வங்கிச்சேவை

மாணவரின் சேமிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் ஹற்றன் நஷனல் வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகளில் வைப்பு வைப்பதற்கு குறிப்பிட்ட வங்கி ஊழியர்கள் பாடசாலைக்கு வந்து நேரடியாக மாணவரிடம் பணத்தை வங்கிகளில் சேர்க்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் உயர்தர மாணவர்கள் அவ்வங்கி உத்தியோகத்தர்களுடன் இணைந்து ஒரு வங்கியின் நடைமுறைகளைக் கற்கவும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

### புலமைப் பரிசில் கொடுப்பனவு

தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களின் புலமைப் பரிசில் உரிய காலத்தில் கிடைக்க அவர்களின் வரவு விபரம் ஒழுங்காக காலக்கிரமத்தில் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு பணம் பெறப்பட்டு மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. அத்துடன் மாணவரின் பெற்றோரின் விருப்புக்கேற்ப அவர்கள் விரும்பும் வங்கியில் இப்பணம் வைப்பில் இடப்படுகிறது.

### தேசிய அடையாள அட்டை,தபால் திணைக்கள அடையாள அட்டை,பாடசாலை அடையாள அட்டை

தரம் 6ல் சேரும் மாணவர்களுக்கு பாடசாலை அடையாள அட்டைகளும் தரம் 9, 10ல் தபால் திணைக்கள அடையாள அட்டைகளும் தரம் 11ல் தேசிய அடையாள அட்டைகளும் உரிய காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

## போக்குவரத்து பருவகாலச் சீட்டுக்கள்

ஒவ்வொரு வகுப்பு மாணவரிடமிருந்தும் உரிய காலத்தில் பணம் சேகரிக்கப்பட்டு கோண்டாவில் போக்குவரத்து சபைக்கு அனுப்பப்பட்டு பருவக்காலச்சீட்டுக்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

## வீதிப்போக்குவரத்து

வாகன விபத்துக்கள் ஏற்படாமல் மாணவர் பாடசாலைக்கு வரும் போது வீதியைக் கவனமாகக் கடந்து வர நலன்புரிச் சங்க படைப்பிரிவு மாணவர்கள் வீதிப்போக்குவரத்து பொலீஸாருடன் இணைந்து கடமை புரிகிறார்கள். அத்துடன் வீதிப்போக்குவரத்து விதிகள் பேணப்படவேண்டுமென மாணவர் ஒன்றுகூடும் நேரங்களிலும் அறிவிப்புக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

## வறிய மாணவர்களுக்கு உதவி

PC நாதன் புலமைப் பரிசில் நிதியம் மூலம் ஒவ்வொரு வருடமும் வாணி விழா கொண்டாட்டத்தின் போது வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படிக்கும் 20 மாணவர்களுக்கு தலா 3000\= பணம் வழங்கப்படுகிறது. அத்துடன் பாடசாலைக் கழகங்களும் தமது சின்னம் சூட்டும் வைபவத்தின் போது சில வசதி குறைந்த மாணவர்களை இனங்கண்டு கற்றல் உபகரணம் வழங்கி உதவிபுரிகின்றன.

## வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

எமது பாடசாலையில் கல்வி அமைச்சின் விதந்துரைப்பின் படி வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கென ஓர் ஆசிரியர் விடுவிக்கப்பட்டுள்ளார். இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களின் சீரழிவு, குடும்ப பொருளாதாரநிலை , நாட்டில் நடைபெறும் வன்முறைகளால் ஏற்படும் பாதிப்பு , இயற்கை அனர்த்தங்கள், என்பவை காரணமாக மாணவர் பல்வேறு விதமான உள நெருக்கடிகளுக்கு உள்ளாகிறார்கள். இந்த உள நெருக்கடிகளுடன் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் தமது உள நெருக்கடிகளை வகுப்பறைகளிலும், பாடசாலையிலும் தமது நடத்தை மூலம் வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் கற்றலில் ஈடுபடுவதும், குறைவாகவுள்ள நிலையில் வகுப்பாசிரியர்கள் பாடஆசிரியர்களால் இனங்காணப்பட்ட இவர்களது பிரச்சனைகளை வழிகாட்டல் ஆலோசனை சேவை ஆசிரியர் அறிந்து அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி உதவிகளையும் வழங்கி வகுப்பறையில் ஏனையமாணவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாகக் கற்பதற்கான உதவியை செய்வார். பாடசாலை அவர்களுக்கு மகிழ்ச்சியான இடமாக மாற்றும் முயற்சியில் ஈடுபடுவார்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர் : அதிபர் (பதவிவழி)

செயலாளர் : திரு. க. கனகரத்தினம்

பொருளாளர் : திருமதி. கௌ. சண்முகலிங்கன்

பாடசாலை வளர்ச்சிப்போக்கில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பல வழிகளிலும் தன் பங்கை நல்கி வருகின்றது.இவ்வகையில் கல்வி பௌதிக வள நடவடிக்கைச் செயற்பாடுகள் விதந்து குறிப்பிடக் கூடியன. பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களை கௌரவித்து வருகின்றனர்.

இச்சங்கத்தின் சேவையும் ஆலோசனையும் வருங்காலத்திலும் பாடசாலை வளர்ச்சிக்க உறுதுணையாக இருக்குமென நம்புவதுடன் செயலாளரினதும் சங்க உறுப்பினர் அனைவரினதும் சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்து இவர்களின் பணி மென்மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

## பழைய மாணவர் சங்கம்

தலைவர் : திருமதி. இ. மகேசன்

செயலாளர் : திருமதி. சி. ஆனந்தகுமாரசாமி

பழைய மாணவர் சங்கம் கற்றல் சம்பந்தமான செலவீனங்களுக்கு உதவி செய்து வருவதுடன். ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களைக் கௌரவித்தும் பாடசாலை நிறுவுனர் நாளில் ஆசிரியர், மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்கியும் பாடசாலைப் பரிசளிப்பு விழாவின்போது பாடசாலை மாணவர்களுக்குப் தங்கப்பதக்கங்கள் வழங்கியும் வருகின்றது. கடந்த வருடம் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்க தமது 25வது ஆண்டு நிறைவை கொண்டாடியவேளை என்னையும் பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்ததுடன் எமது பாடசாலை பாண்ட் வாத்தியக்குழுவினருக்கான உடை தயாரித்தமைக்கான செலவையும் தந்துதவியுமையை நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இச் சங்க உறுப்பினர்களது பங்களிப்பினைப் பாராட்டுவதுடன், இச் சங்கத்தின் பணி தொடரவும், மேலும் வளரவும் வாழ்த்துகின்றேன்.

# நன்றி நவிலல்

எங்கள் அழைப்பை முழுமனதுடன் ஏற்று இக்கல்லூரியின் பரிசளிப்புத்தினமாகிய இந்நாளில் வருகை தந்து சிறப்பித்து எம்மை மகிழ வைத்து இனிய உரையாற்றி எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்த பற்குணராஜா தம்பதியினருக்கு எனது தனிப்பட்டதும் பாடசாலை சமூகத்தின் சார்பிலுமான இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து ஆசியுரை வழங்கிய வணக்கத்திற்குரிய தேவதாசன் அடிகளார் அவர்களுக்கும் நிறுவுனர் உரை வழங்கிய எமது பழைய மாணவியான யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி. ரதிராணி யோகேந்திரராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள்

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திசங்கசெயலாளர் உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத் தலைவர், உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையின் தேவைக்கேற்ப ஆலோசனைகளும், உதவிகளும் நல்கி வரும் மேலதிக கல்விப்பணிப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர் , திணைக்கள அதிகாரிகள், அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமது சிறார்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்ட பெற்றோர் பலர் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர். இவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டும் அனைவருக்கும் நன்றி கூறி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்

M -136

# Maths Quiz Competition 2009

**Medium: Tamil**

| Grade | Name | Divisional Level Rank | Zonal Level Rank | Sub Provincial level Rank |
|---|---|---|---|---|
| 6 | Sivanuja Sivasubramaniam | | 1 | |
| | Saranya Navaneethakumar | | 1 | |
| 7 | Abiramy Jeyakumar | | 1 | |
| | Niluja Mahadevan | | 3 | |
| 8 | Pavithra Murugananthasarma | | 1 | |
| 9 | Gowsalya Balasubramaniam | | 1 | 3 |
| | Piranavi Thiyagamoorthy | | 2 | |
| 10 | Piruntha Navaneesan | | 2 | 2 |
| 11 | Mithurika Mikunthan | | 1 | 3 |
| | Sangeetha Balasubramaniam | | 3 | |

M-13e

## Maths Quiz Competition 2009

**Medium: English**

| Grade | Name | Divisional Level Rank | Zonal Level Rank | Sub, Provincial level Rank |
|---|---|---|---|---|
| 6 | Subanila Subaseelan | | 1 | |
| | Mathini Kamalanathan | | 2 | |
| | Priyanthy Mahendran | | 3 | |
| 7 | Keerthiga Ramakrishnan | | 1 | |
| | Harani Pirabakaran | | 3 | 2 |
| 8 | Bhavana Sivagogan | | 1 | |
| | Thenuga Uruthiramoorthy | | 3 | |
| 9 | Tharanya Ganenthiran | | 1 | |
| | Kanchana Senthinathan | | 2 | |
| 10 | Lakshiya Indreswaran | | 1 | |

# Science Quiz Competition 2009

**Medium : Tamil**

| Grade | Name | Zonal Level Rank | Provincial level Rank |
|---|---|---|---|
| 6 | Vaishnavi Sivabaskaran | Second | |
| 6 | Sivanujah Sivasubrananiam | Second | |
| 7 | Kajaluxsi Ketheeswaran | First | |
| 7 | Abirami Jeyakumar | Second | |
| 8 | Thanushiya Mahendran | | |
| 9 | Tharshika Sathiyathasan | First | Second |
| 9 | Geethagingini Thangarajah | First | |
| 10 | Ann Abinaya Arulnesan | Third | |
| 11 | Pavithra Ranganathan | Third | First |

## Science Quiz Competition 2009
## Medium: English

| Grade | Name | Zonal Level Rank | Provincial level Rank |
|---|---|---|---|
| 6 | Sivasangari Sivakumaran | First | |
| 6 | Adithya Ramanitharan | Second | |
| 7 | Keerthiga Ramakrishnan | First | Third |
| 8 | Bhavana Sivayogan | First | First |
| 9 | Saranga Sbhanayagam | Second | |
| 10 | Amizhthini Nakeeran | Second | Third |
| 11 | Sumitha Sivasubramaniam | Second | |
| | Mathangi Navakumaran | Second | |

## Athletics-2009

| Age Group | Games | Division | Zonal | District | Provincial | National |
|---|---|---|---|---|---|---|
| Under 16 | Table Tennis | | 1st | | | |
| Under 15 | Net Ball | Champion | | | | |
| Under 19 | Net Ball | Runner up | | | | |
| Under19 | P.t Squad | | Champion | | | |
| Under 19 | Basket Ball | | 2nd Runner up | | | |
| Under 19 | Chess | | Runner up | | | |
| Under 15 | Chess | | Runner up | Runner up | Runner up | 15th |
| Under 19 | Carram | | Runner up | Champion | Runner up | Paticipated |